# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்**:154 **தேதி**:-09.07.2014

**தலையில்லா பொதுத்துறை நிறுவனங்களும் ஒரு சில மத்திய சங்க செய்திகளும்**

அன்பார்ந்த தோழர்களே,

35 பொதுத்துறை நிறுவனங்களின் CMD, MD, CHAIRMAN உள்ளிட்ட தலைமை பொறுப்புகளுக்கு ஆட்களை நியமிக்காத காரணத்தால் அவை காலியாக உள்ளன. CMD பதவிகள் காலியாக உள்ள BSNL மற்றும் MTNL ஆகியவையும் அவற்றில் உள்ளடங்கும். இந்த பதவிகள் எல்லாம் கூடுதல் பணியாக வேறு சில அதிகாரிகளால் கவனிக்கப்படுகின்றன. BSNLல் இந்த பதவிகளோடு மனிதவள மற்றும் நிதி இயக்குனர்கள் பதவிகளும் காலியாக உள்ளன. அரசாங்கம் இவற்றை பற்றி கவலைப்படாமல் இருப்பது என்பது ஒரு வேதனைக்குரிய விஷயம். இது பொதுத்துறை நிறுவனங்களை பலவீனப்படுத்தி அழிக்க நினைக்கும் மத்திய அரசின் சித்து விளையாட்டின் ஒரு பகுதிதான்.

<u>2.9% ***IDA*** உயர்விற்கான உத்தரவை DPE வழங்கியுள்ளது. உத்தரவு எண் W-02/2002/2014-DPE(WC)-GL-XII/14 Dated 03.07.2014.</u>

<u>இலவச சிம்கார்ட் வழங்குவதில் ஒரு சில மாற்றம் தேவை-மத்திய சங்கம்:-</u> நமது மத்திய சங்கத்தின் கோரிக்கையான அனைவருக்கும் இலவச சிம்கார்ட் என்பதை ஏற்று கார்ப்பரேட் அலுவலகம் உத்தரவு வெளியாகி உள்ளது. அதில் கீழ்கண்ட மாற்றங்கள் தேவை என மத்திய சங்கம் கடிதம் எழுதியுள்ளது:-

அ) MTNL பகுதியில் உள்ள BSNL ஊழியர்களுக்கும் இந்த சிம்கார்ட் வழங்க வேண்டும்.

ஆ) இந்த 200ரூபாய் மதிப்புள்ள சிம்கார்டில் இருந்து ஊழியர்களுக்கு இதர நெட்வொர்க்கில் உள்ள எண்களையும் தொடர்பு கொள்ள அனுமதி வழங்க வேண்டும்.

<u>***SC/ST*** ஊழியர்களுக்கு தகுதி பெறும் மதிப்பெண்ணில் தளர்வு:-</u> SC/ST ஊழியர்களுக்கு DOP&T உத்தரவுகளின் அடிப்படையில் தகுதி பெறும் மதிப்பெண்களில் தளர்வு வழங்க வேண்டும் என நமது மத்திய சங்கம் கடந்த இரண்டு வருடங்களாக வலியுறுத்தி வந்துள்ளது. இத்தனை நாட்களாக இந்த பிரச்சனையில் கவனம் செலுத்தாத நிர்வாகம் இதனை பரிசீலிக்க தற்போது ஒரு குழுவை நியமித்துள்ளது. 27.06.2014 அன்று நடைபெற்ற தேசிய கவுன்சில் கூட்டத்தில் மனித வள இயக்குனருடன் ஊழியர் தரப்பு தலைவர்கள் கடுமையாக விவாதித்தனர். இந்தக் குழு அமைக்கப்பட்டதாக 20.06.2014 தேதியிட்ட கடிதம் 05.07.2014 அன்று தான் தொழிற்சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. நமது மத்திய சங்கம் இந்தக் குழுவில் ஊழியர் தரப்பு பிரதிநிதிகளும் இருக்க வேண்டும் என வலியுறுத்தி கார்ப்பரேட் அலுவலகத்திற்கு கடிதம் எழுதியுள்ளது.

<u>குழுக்கள் சந்திப்பு:-</u> 23.07.2014 அன்று பதவிகளின் பெயர் மாற்றக் குழுவின் கூட்டமும், போனஸ் குழுவின் கூட்டமும் புதுடெல்லியில் நடைபெற உள்ளதாக அறிவிப்பினை கார்ப்பரேட் அலுவலகம் வெளியிட்டுள்ளது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

S. Chellappa

**(S.செல்லப்பா)**
**மாநில செயலாளர்.**